# நியாயாதிபதிகள்

| | |
|---|---|
| 1446 | கி.மு. யாத்திரை |
| 1406 | இஸ்ரவேலர்கள் கானானுக்குள் செல்லுதல் |
| 1377 | ஒத்னியேல் 1 வது நியாயாதிபதி |
| 1093 | சாமுவேல் அழைக்கப்படல் |
| 1075 | சிம்சோன் கடைசி நியாயாதிபதி |
| 1051 | சவுல் முதலாவது அரசன். |

**பின்னணி;-** தற்போது இஸ்ரவேலர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் குடியிருக்கின்றார்கள், இரண்டுவிதமான பிரச்சனைளை அவர்கள் எதிர்நோக்குகின்றார்கள், ஒத்துப்போதல் மற்றது எதிர்த்து நிற்றல். அவர்கள் கானானியரை அழித்துவிடல் என்ற கட்டளைக்கு ஒத்து நடக்கும்போது, அவர்கள் சுருப வணக்கத்திற்குள் அகப்பட்டுக் கொண்டு தவறான நடத்தைகளில் ஈடுபட்டார்கள். இதனால் பல தடவைகள் யுத்தத்தில் தோல்விகளடைந்தார்கள். இவர்கள் நியாயாதிபதிகளினால் பல தடவைகள் விடுவிக்கப்பட்டார்கள். நியாயாதிபதிகள் சட்டபூர்வமான அதிகாரிகளல்ல, ஆனால் வல்லமையான தலைவர்களாவார்கள், இவர்கள் வெற்றிகரமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். மக்களுக்காக தீர்மானம் எடுத்து வழிநடத்துபவர்கள். நியாயாதிபதிகள் புத்தகம் ஒரு சுழற்சிமுறையிலான வட்டத்தைக் கொண்டுள்ளது.

- **பாவம்**:- ( கர்த்தருடைய பார்வையில் கெட்ட செயற்பாடுகளைச்

நியாயாபதிகள் புத்தகம் யோசுவாப்புத்தகத்திற்கு நேரெதிர்ப் புத்தகமாகும். யோசுவாப் புத்தகத்தில் ஜனங்கள் கர்த்தருக்கு கீழப்படிந்தும், அவர் மேல் முழுநம்பிக்கையுடனும் இருந்தபடியால் அவர்கள் தேசத்தை முழுமையாக வெற்றி கொண்டார்கள். ஆனால் நியாயாதிபதிகள் புத்தகத்தில், ஜனங்கள், விக்கிரக வணக்கத்திலும், கர்த்தருக்குக் கீழ்ப்படியாமலும் இருந்த காரணத்தினால் தங்கள் எதிரிகளினால் அதிகம் துன்பப்படுத்தப்பட்டார்கள்.

செய்தார்கள்): 2:11; 3:7, 12; 4:1; 6:1; 10:6; 13:1)

- **பாகால்** தெய்வங்களுக்கு அடிமைகளானார்கள்
- **கர்த்தரிடம்** மன்றாடினார்கள்
- **இரட்சிப்பு அடைந்தார்கள்**

இஸ்ரவேலர்களின் நடத்தைக் கோலங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்றன. வட்டத்தைப்போல சுழுற்சிமுறையில் செயற்பாடுகள் நடந்தன. நியாயாதிபதி மரணமடைந்தவுடனே, அவர்கள் திரும்பி அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்துகொள்ளவும், தங்கள் பிதாக்களைப்பார்க் கிலும் கேடாய்நடந்து, தங்கள் கிர்த்தியங்களையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள். (2:19). நியாயாதிபதிகள் இஸ்ரவேலர்களை பிரச்சனைகளிலிருந்து விடுவிப்பதற்கான சேவைகளைச் செய்தார்கள்.

**எழுதியவர்;-** யார் என்று தெரியாது. சிலர் சாமுவேல் எழுதியதாக கூறுகின் றனர். அவர் இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியாயிருந்தார் என்று கூறுகின்றார்கள்,அதனால் அவரே இதனை எழுதியிருக்கலாம் என்று கூறுகின்றார்கள்.(1சாமு. 7:6, 15-17; அப் 13:20),

**காலம்**; யோசுவா மரணமடைந்தபின்பு, அரசர்கள் ஆட்சி தொடங்கும் வரை நிகழ்ந்த நிகழ்வுகளை விபரிப்பதே நியாயாதிபதிகள் புத்தகமாகும். இது 335 வருட காலங்களைக் கொண்டதாகும். (1380-1045 கி.மு.).ராஜாக்கள் இல்லாதிருந்த அந்நாட்களில் நடைபெற்ற தொடர் நிகழ்வுகளை அவதானிப்பதே இந்தப் புத்தகத்தின் நிகழ்ச்சிகளாகும். (17:6; 18:1; 19:1; 21:25). நியாயாதிபதிகள் மன்னராட்சிக் காலங்களில் எழுதப்பட்டவைகளாகும்., சவுலுடைய காலத்தில், சாமுவேல் 30-40 வருடங்கள் வாழ்ந்தவராவார், அவரே இதன் எழுத்தாழராகவும் இருக்கலாம். நியாயாதிபதிகள் காலம் 450 வருடங்களாக இருந்தது என்று புதிய எற்பாடு கூறுகின்றது. (அப்13:20)

**நோக்கம்**:-. நியாயாதிகள் புத்தகம் மூன்றுவிதமான நோக்கங்களைக் கொண்டுள்ளது.

(1)சரித்திரசம்பந்தமானது.
(2)மதநம்பிக்கைசார்ந்தது.
(3) ஆவிக்குரிய தன்மையைக் கொண்டது.

சரித்திர சம்பந்தமாக,இஸ்ரவேல் சரித்திரத்தில் கானான் வெற்றி கொள்ளப்பட்ட பின்பு சாம்ராஜ்ஜம் உருவாகுதல் பற்றியவற்றை விபரிக்கின்றது.

மத சம்பந்தமாக , நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்படிதல் சமாதானத்தை யும், ஜீவனையும் கொண்டுவரும் என்றும், கீழ்ப்படியாமையானது துக்கத்தையும் மரணத்தையும் கொண்டுவரும் என்றும் கூறுகின்றது .கர்த்தர் ராஜரீகம் செய்வதை விரும்பாத இஸ்ரவேலர்கள், நியாயாதி பதிகள் தலைமையில் கர்த்தர் மேலுள்ள நம்பிக்கையைக் கைவிட்டு, குழப்பங்களில் ஈடுபட்டார்கள். இவ்வாறு தொடர்ந்து கர்த்தர் பக்கம் வருவதும், பின்பு கர்த்தரைவிட்டு பாவத்தில் ஈடுபடுவதும் நியாயாதி பதிகள் அவர்களைத் திருத்துவதுமாக ஒரு சுழற்சிவடிவில் தொடந்து நடப்பதை அவதானிக்கலாம். இதனைக் கைவிட்டு கர்த்தர்பக்கமாகவே இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

**ஆவிக்குரிய விடயமாக**, உடன்படிக்கையின் பிள்ளைகளை கர்த்தர் நன்மையாக நடத்துவதை அவதனிக்கமுடியும். தன்னுடைய ஜனங்கள் அசுத்தத்தை விட்டு, மனம்திரும்பி கர்த்தர்பக்கம் வரும்போது, கர்த்தர் அவர்களை மன்னித்து, அவர்களுக்காக ஆவிக்குரிய தலைவர்களை உருவாக்கி அவர்களை அவர்களின் துன்புறுத்துபவர்களிடமிருந்து விடுதலையாக்குகிறார்.

**வேதாகமப்புத்தகங்களுடன் ஒப்பீடு செய்தல்-யோசுவா**

• யோசுவாபுத்தகத்தில், வல்லமையான, சகிப்புத்தன்மையுடைய தலை வர்களைக் காணமுடிகிறது, அத்துடன் கோத்திரங்களுக்குள் வலுவான ஒற்றுமை இருந்தது. நியாயாதிபதிகள் புத்தகத்தில் சகிப்புத்தன்மையுடைய தலைவர்கள் இல்லை. அத்துடன் கோத்திரங்களுக்கிடையில் ஒற்றுமையும் இல்லை.

• யோசுவா புத்தகத்தில் இஸ்ரவேலர்கள் நிலங்களை கானானியர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார்கள், நியாயாதிபதிகள் புத்தகத்தில் கானானியர்கள், இஸ்ரவேலர்களிடமிருந்து நிலங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

• யோசுவா புத்தகத்தில் கீழ்ப்படிதல், வெற்றி, சுதந்திரம் அழுத்திக் கூறப்பட்டுள்ளது, நியாயாதிபதிகள் புத்தகத்தில் கீழ்ப்படியாமையும், தோல்வியும், அடிமைத்தனமும் காணப்படுகின்றன.

**சுருக்கம்.**

**இஸ்ரவேலர்களின் ஆளுகை.(1:1-3:8)**

1. கானானை வெற்றி கொள்ளுதல் தொடர்கின்றது.(1:1-26)
2. ஆறு கோத்திரத்தார் தங்கள் நிலங்களை வெற்றி கொள்வதில் தவறிவிட்டனர். (1:27-36)

**கீழ்ப்படியாமையும் அதன் விளைவும். (2:1-3:7)**

**இஸ்ரவேலர்களின் போர் வீரர்கள்.(3:8-16:31)**

- ஒத்னியேல் (3:8-11)
- ஏகூத்,சம்கார். (3:12-31)
- தெபோராள், பாராக் (4-5)
- கிதியோன் (6-8)

**கிதியோன் வழிநடத்த ஆயத்தமாதல்.(6:11-7:15)**

- மீதியானியர்கள் மீதான கிதியோனின் முதல் வெற்றி. (7:16-25)
- மீதியானியர்கள் மீதான கிதியோனின் இறுதி வெற்றி (8:1-21)

**கிதியோன் இஸ்ரவேல் மீது ஆளுகை செய்தல்.(8:22-35)**

**கொலைகார அபிமெலோகியர்களின் ஆட்சி (9)**

தோலா (10:1-5)

அம்மோனியர்கள் இஸ்ரவேலர்களை ஒடுக்கினார்கள். (10:6-18)

**யொப்தாவின் வெற்றியும் குழப்பமும். (11:1-12:7)**

இப்சான் ஏலோன் அப்தோன் (12:8-15)

**சாம்சன். (13-16)**

- சிம்சோனின் பிறப்பு (13)
- சிம்சோன் பெலிஸ்திய ஸ்திரியை விவாகம் பண்ணுதல். (14)
- பெலிஸ்தருக்கு எதிராக, சிம்சோன் சில கெட்டித்தனங்கள் செய்தல். (15)
- தெலிலாளும் சிம்சோனும்.(16:1-22)
- சிம்சோனின் மரணம் (16:23-31)

**இஸ்ரவேலர்களின் வெட்கம் (17-21)**

**மீகாவின் விக்கிரகம். (17)**

**தாண்னியர்களின் விக்கிரகம் அதன் மறு இடமும். (18)**

**பென்ஜமினியர்களின் குற்றங்கள் (19)**

**பென்ஜமினியர்களுக்கு எதிரான யுத்தம் (20**

**முரண்பாடு நீக்கம் ;-பென்ஜமினியர்களுக்கு மனைவிகள். (21)**


**நியாயாதிபதிகளின் காலங்கள்.** :-இந்தக்காலத்தின் செயற்பாடுகள் யாவும் தனிப்பட்ட 12போர்களை அல்லது 12 பேர்களின் குழுக்களை மையமாகக் கொண்டு செயற்பட்டன.

- கர்த்தரின் தூதனானவர்.நியா. 2:1; 6:11; 13:3
- கர்த்தரின் ஆவியானவர்.நியா. 3:10; 13:25; 14:6; 15:14
- குழப்பம் தரும் ஆவி.நியா. 9:23
- பன்னிரண்டு இராணுவ சீர்திருத்தவாதிகள்.நியா. 3-8; 10-16
- இரத்தம் சிந்துவோர்.நியா. 9
- விக்கிரக ஆராதனை செய்யும் மகன்.நியா. 17-18
- கபடமுள்ள லேவியர்.நியா. 19-20
- மோவாபியப் பெண் ரூத்.1-4

**ஒழுக்கம் இல்லாத ஆசாரியன் 1சாமு. 1-4**

**அர்ப்பணிப்புள்ள தாயார். 1சாமு. 1-2**

**குழப்பம் அடைந்த சில பெலிஸ்தீனியர்கள். 1சாமு. 5-6**




## இஸ்ரவேலர்களின் ஆளுகை (1:1-3:8)

### 1:1-26 கானானை வெற்றி கொள்ளல்.

கானானை வெற்றி கொள்வதன் தொடர்ச்சி நியாயாதிபதிகள் புத்தகத்தில் இடம்பெறுகின்றது. யோசுவாவின் பதிவுகளை மீள்பதிவு செய்யும் வகையில் பல சம்பவங்கள் 1-2 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. யோசுவாவின் மரணத்திற்குப் பின்பு , கானானியர்களிடமிருந்து நிலம் பறிமுதல் செய்ய வேண்டியுள்ளது யூதாவும் சிமியோனும் பேசேக் நகரத்தைக் தோற்கடித்து அதன் ராஜாவாகிய அதோனி-பேசேக்கைப் பிடித்துக் கொண்டார்கள். 1.1 யோசுவா மரணித்த பின் தேவனை கேட்டு யுத்தத்துக்கு புறப்பட்டனர் கர்த்தர் யூதா எழுந்து புறப்படக்கடவன் என்றார். 1.7 விதைத்ததை அறுத்த அதோனிபேசேக். 1.8 எருசலேம் பிடிபடுகிறது. (முழுமையாக கைப்பற்றவில்லை). **காலேப்பின் மகளை ஒத்னியேல்**

விவாகம் செய்தான். (3:8-11). யோசுவா15:13-19. பெலஸ்தியாவிலுள்ள மலைப் பிரதேசங்களையும்,நகரங்களையும், யூதா கோத்திரத்தார் வெற்றி கொண்டார்கள். பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இரும்பு ரதங்கள் இருந்தபடியினால், அவர்களைத் துரத்தக் கூடாமறபோயிற்று. (1:16-19).ஆரம்பத்தில் யூதா எருசலேமைப் பிடித்த போதிலும், (1:8), அது திரும்பவும் தன் சுதந்திரத்தினை பெற்றுக் கொண்டது, (1:21)அது தாவீதின் காலம் வரை எபூசியரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. (2சாமு. 5:6-9).எப்பிராமீயரும், மனாசேயும் சேர்ந்து பெத்தேலைக் கைப்பற்றினார்கள். (1:22-26),இது முற்பிதாக்களின் காலத்தில் முக்கியமான நகரமாகும். (ஆதி. 28 ;10-19).

**1:27-36 ஆறு கோத்திரங்கள் தங்கள் நிலங்களை வெற்றி கொள்ளத் தவறிவிட்டன.**

மனாசே, எப்ராயீம்,செபுலோன், ஆசேர், மற்றும் நப்தலி ஆகிய கோத்திரங்கள் இஸ்ரவேலர் பலத்தபோது, கானானியரை முற்றிலும் துரத்தி விடாமல் பகுதிகட்டப்பண்ணினார்கள். எமோரியர் தாண்புத்திரரைப் பள்ளத்தாக்கில் இறங்கவொட்டாமல், மலைத் தேசத்திற்குப் போகும் படி நெருக்கினார்கள். தாண் கோத்திரத்தார் அவர்களிடம் யுத்தம் செய்யாமல் வேறு இடங்களில் குடியமர்ந்தார்கள். (18:1-31).

**2:1-6 போகீமில் எச்சரிப்பும் அழுகையும் :-** கர்த்தருடைய தூதனானவர், கானானியரை, இஸ்ரவேலர்கள் அனுப்பமுடியாமல் போனதைக்கூறினார், (ஆதி. 16:1-16), இது அவர்களின் கீழ்ப்படியாமையினாலும், பாகால் வணக்ககாரர்களுடன் ஒத்துப் போனதுமே காரணமாகும். ஜனங்கள் இந்தத் துக்கத்தை ஏற்றுக் கொண்டு அந்த இடத்திற்கு போகீம் என்று பெயரிட்டார்கள். போகீம் என்றால் அழுகை என்று அர்த்தமாகும்.

**2:7-19 மத எதிர்ப்பிற்கான ஒரு முன்பார்வை:-** நியாயாதிபதிகள் காலத்தில் இஸ்ரவேலர்கள் ஏற்பட்ட மதஎதிர்ப்பு பற்றிய சுருக்கத்தை எழுத்தாளர் இங்கு கொடுத்துள்ளார். யோசுவா வாழ்ந்த காலத்தில் இஸ்ரவேலர்கள் கீழ்ப்படிந்தவர்களாய் இருந்தபோதும், அவர் மரித்தபின்பு வந்த புதிய தலைமுறையினர், கானானிய தெய்வங்களை வணங்கினார்கள், அதனால் அவர்கள் கானானியர்களின் ஆட்சிக்கு உட்பட்டார்கள். இவ்விதமான அழுத்தங்களிலிருந்து அவர்களைத் தப்புவிப்பதற்காக நியாயாதிபதிகளைக் கர்த்தர் அனுப்பிவைத்தபோதும், அவர்கள் கர்த்தரைச் சேவிக்கவில்லை. இதனால் ஒவ்வொரு பரம்

பரையினரும் இன்னும் அதிகம் பாவம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார்கள். (2:19).

**2:20-3:7 கலப்புத் திருமணமும் விக்கிரக ஆராதனையும்:-** கானானியர்களை இஸ்ரவேலர்கள் மத்தியில் வாழுவதற்கு கர்த்தர் அனுமதித்து, தனக்கு இஸ்ர வேலர்கள் காண்பிக்கும் பக்தியைப் பரிசோதித்தார். இஸ்ரவேலர்கள் மத்தியில் வாழும் கானானியருடன் இஸ்ரவேலர்கள் உறவுவைத்து கலப்புத் திருமணம் செய்து கொண்டார்கள், இதன்விளைவாக விக்கிர ஆராதனைக்கும் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். (3:6)–இதனாலேயே மோசேயும், யோசுவாவும் இதனை எதிர்த்தார்கள். (உபா. 7:3-4; யோசு. 23:6-13).

**இஸ்ரவேலர்களின் போர்வீர்ர்கள். (3:8-16:31)**

1. **3:8-11 ஒத்னியேல்:-** இஸ்ரவேலர்களின் பாவத்தினால், கர்த்தர் அவர்களை மொசபத்தோமிய ராஜாவின் நெருக்குதல்களுக்கு எட்டுவருடங்களுக்கு அனுமதித்தார். பின்பு அவர் ஒத்னியேலை உருவாக்கினார், காலேப்புடைய மகளின் கணவனும், மருமகனுமாவார்(1:12-15), அவர் இஸ்ரவேலர்களை விடுவித்தார். அதன் பிற்பாடு நாற்பது வருடங்களாக தேசம் அமைதியாக சந்தோஷத்தை அனுபவித்தது. கர்த்தருடைய ஆவியானவர் ஒத்னியேல் மேல் வந்தார்(3:10). இது கிதியோனுக்கும் கூறப்பட்டது. (6:34)ஜெப்தாவுக்கும் கூறப்பட்டது(11:29), சிம்சோனுக்கும் கூறப்பட்டது. (13:25; 14:6, 19; 15:14; 1சாமு. 9:27-10:8.)

2. **3:12-30 ஏகூத் தன் இடக்கையினால் வழிநடத்தினான்.**;-திரும்பவும் இஸ்ரவே லர்கள் பொல்லாங்கானதையே செய்துவந்தார்கள். கர்த்தர் அவர்களைத் திரும்பவும் மோவாப் ராஜாவாகிய எக்லோன் மூலமாக 18 வருடம் ஒடுக்கி னார்.அதன்பின் அவர்களைத் தப்புவிக்க ஒரு மனிதனை எழுப்பினார், அவர் ஒரு பென்ஜமின் கோத்திரத்தார்,பெயர் ஏகூத்.அவன் காணிக்கையை மோவா பின் ராஜாவாகிய எக்லோனுக்குச் செலுத்தினான்; ஏகூத்தின் இடது கையை நீட்டி, தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டியிருந்த கத்தியை உருவி, அதை ராஜாவின் வயிற்றிற்குள்பாய்ச்சி அவனைக் கொலை செய்தான்.அதன் பின்பு மோவாபியருக்கு எதிரான ஒரு யுத்தத்தைச் செய்து அவர்களை மேற் கொண்டான். 80 வருடங்கள் அமைதியான ஆட்சி அங்கு நிலவியது. (3:30).

3. **3:31 சம்கார்**;- அவன் பெலிஸ்தரில் அறுநூறு பேரை ஒருதாற்றுக் கோலால்

முறிய அடித்தான்; அவனும் இஸ்ரவேலை இரட்சித்தான். தாற்றுக் கோல் என்றால் மாடு ஓட்டுவதற்கு பயன்படுத்துவது.

4. **1-3 யாபீன், அவனுடைதொளாயிரம் இரும்புரதங்களும்;-** கர்த்தர் இஸ்ரவேலர்களை கானானிய ராஜாவாகிய யாபின் கையில் விற்றுப் போட்டார். அவன் தன்னுடைய தொளாயிரம் ரதங்களுடன் சிசெரா என்ற சேனாதிபதியின் செயற்பாட்டில் விட்டுவிட்டான். யாபீனிடம் 20 வருட அடிமைத்தனம்.

5. **4:4-16 தெபொராள், பாராக்:-** தெபோராள் இஸ்ரவேலின் தீர்க்கதரிசியாக இருந்தாள், இப்போது அவள் நியாயாதிபதியாக இருக்கிறாள். பாராக் கர்த்தருடைய திட்டத்தை தெளிவாக அவமதித்தார், இராணுவத்தை கானானியருக்கு எதிராக வழிநடத்தினார். தெபோராள் இதை அவனுக்கு ஞாபகப்படுத்தியபோது, அவனும் அவள் வருவதானால் தானும் வருவதாக ஒப்புக் கொண்டான். எப்போது யுத்தம் செய்ய வேண்டும் என்பதை தெபோராள் அவனுக்கு கூறினாள். (4:14), கர்த்தர் கானானிய இரானுவத்தாருக்கு ஒரு வழியை ஆயத்த மாக்கினார். தெபோராளினால், பாராக் அவதானிக்கப்பட்டபோதிலும் அவன் ஒரு போதும் இஸ்ரவேலின் விடுதலையாளர் என்று ஒருதரும் அழைக்கவில்லை. (1சாமு. 12:11).

6. **4:17-24 சிசெரா தவறான இடத்தில் அடைக்கலம் தேடினார்.:-**தோல்வியை உணர்ந்தவராய் , காலினால் ஓடி, யாகோலின் கூடாரத்தில் அடைக்கலம் புகுந்தார், எப்படியோ, அவன் இஸ்ரவேலர்களுக்கு உண்மையாயிருந்தார், சிசேரா நித்திரையாக இருக்கையில், கூடார ஆணியை அவனது நெற்றியில் ஏற்றி அவனைக் கொலைசெய்தாள். தெபோராளின் கூற்றை உண்மை யாக்கினான். (4:9).

**5:1-31 தெபோராளும் பாராக்கும் வெற்றிக்கீதம் பாடினார்கள்.;-** வெற்றிக்குப் பிற்பாடு, தெபோராளும் பாராக்கும் மற்றும் யுத்தத்தில் பங்கு பற்றியோர் யாவரும் வெற்றிக்கீதங்கள் பாடி கர்த்தரைத் துதித்தார்கள். 40 வருடம் தேசம் அமைதலாயிருந்தது பாடல் அயல் தேசத்து ராஜாக்கள் கர்த்தர் செய்யும் அற்புதமான கிரியைகளை அறிய வேண்டும் என்பதாக அமைந்தது. இது கானானியரின் கீழ் இஸ்ரவேலர்களின் துன்பங்களை எற்றுக் கொண்டதாகவும், கர்த்தர் எல்லாவற்றிற்குமாக வெற்றியைக் கொடுத்தார் என்றும் பாடினார்கள். விஷேசமாக நப்தலி, செபுலோன் கோத்திரங்கள்

தாங்களும் பலிசெலுத்த கிடைத்த தருணத்திற்காக துதித்தார்கள். (5:18),பாடலானது மற்றக் கோத்திரங்களான ரூபன், தான், ஆசேர், கிலேயாத் ஆகிய கோத்திரங்களை யுத்தத்தில் பங்குபற்றாததற்காக பழித்துரைத்தது(5:15-17).கீலேயாத் என்பது காத் கோத்திரத்தையும், மனாசேயின் அரைக் கோத்திரத்தையும் குறிப்பிடுகின்றது. இஸ்ரவேலர்களுக்காக கர்த்தர் முன்னின்று செயற்பட்டார் என்றும் பாடல் கூறுகின்றது,பெரும் மழையை அனுப்பி எதிரிகளின் இரதங்கள் பிரயாணம் செய்யமுடியாவாறு சகதியும்சேற்றையும் உண்டாக்கினார் அதனால் வெற்றி உண்டு பண்ணினார் என்று பாடல் அமைகின்றது. (5:20-22; 4:7, 15) பாடல், சிசேராவின் தாயார் மகன் வெற்றியோடு வருவார் என்று வீணாக எதிபார்க்கும் குறிப்புடன் முற்றுப் பெறுகின்றது. (5:28-30). 5.31 பின்பு தேசம் 40 வருடம் அமைதலாயிற்று.

**8. 6:1-6 மீதியானியர் இஸ்ரவேலர்களை ஒடுக்கினார்கள்.;-** இஸ்ரவேலர்களின் தொடர்ச்சியான கீழ்ப்படியாமை இஸ்ரவேலர்கள் மீதியானியர்களின் ஆளுகை க்குள்படுத்தப்பட்டார்கள். ஏழு வருடங்களாக இஸ்ரவேலர்களின் அறுவடை நாசமாக்கப்பட்டது. அவர்களின் ஒடுக்குதலால் இஸ்ரவேலர்கள் குகைகளில் ஒளிக்கவேண்டியதாயுற்று. (6:2).

**9. 6:7-10"பாவம் துக்கத்தைக் கொண்டு வந்தது".** இஸ்ரவேலர்கள் மீதியானர்களின் ஒடுக்குதலின் நிமித்தம் கர்த்தரிடத்தில் முறையிட்டார்கள், கர்த்தர் அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பிவைத்தார், அவர் வந்து கடந்த காலத்தில் கர்த்தர் எவ்வாறு இஸ்ரவேலர்களை மீட்டுக் கொண்டார் என்பதனை ஞாபகப்படுத்தினார். அந்நிய தேவர்களை ஆராதிக்க வேண்டாம் என பல தடவைகள் எச்சரித்து வந்தார், ஆனால் அவர்கள் கீழ்ப்படியவேயில்லை. இப்போது அவர்கள் தங்கள் கீழ்ப்படியாமைக்கான கிரயத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**10. 6:11-24 கிதியோன்.;- ஒரு அதிஸ்டமில்லாத தலைவர்.** கிதியோன் கோது மையை மீதியானியரின் கைக்குத்தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச்(திராட்சை பழத்தை நசுக்கி பிழியும் ஆலை) சமீபமாய் அதைப் போரடித்தான். கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார், அத்துடன் இஸ்ரவேலர்களை மீதியானியரின் கைகளிலிருந்து மீட்டுக்கொள் என்றார். கிதியோன் என்னோடு என்று கூறாமல் எங்களோடு என்று கூறினார்,

தன்னைக்காட்டில் தன் இன மக்களை நேசித்தார். **இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்.** உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ: நான் உன் கூட இருப்பதால் நீ அநேகரை இரட்சிப்பார். (6:15).**கிதியோன் கர்த்தர்தான் தன்னை அழைத்தார் எனின் ஒரு சிறிய அடையாளத்தைக் கேட்டான். அவன் ஒரு காணிக்கயைக் கர்த்தருக்கு கொண்டுவந்த போது, தூதன் அதனைத் தொட்டவுடன் அது அக்கினியினால் விழுங்கப்பட்டது.**

**6:25-32 "பாகால் தன்னைக்காப்பாற்றிக் கொள்ளட்டும்".** தன் தகப்பனுடைய பாகாலுக்காகக் கட்டப்பட்ட பலிபீடத்தைத் தகர்த்துப் போடும்படி கர்த்தர் கிதியோனிடம் கூறினார் அத்துடன் அதில் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படியும் கூறினார். கிதியோன் இதனைச் செய்து முடித்தார், அதனால் ஜனங்கள் அவன் தகப்பனாகிய யோவசிடம், கிதியோனைத் தண்டிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள், பாகால் உண்மையான தெய்வமானால், பாகால் அவனோடே வழக்காடட்டும் என்று சொல்லி, அந்நாளிலே அவனுக்கு யெருபாகால் என்று பேரிடப்பட்டது. (6:32; 7:1; 8:29).

**6:33-35 கிதியோன் எக்காளம் ஊதி இராணுவத்தை சேர்த்துக்கொண்டான்.;-** மீதியானியர்களினதும், அமலேக்கியர்களினதும் படையினர் இணைந்து இஸ்ரவேலர்களுக்கு விரோதமாக ஆயத்தமான போது, கர்த்தருடைய ஆவியானவர் கிதியோனின் மீது இறங்கினார். படையில் இணைந்து கொள்ளும்படி எக்காளம் ஊதினான், அவன் தகப்பானாருடைய குடும்பங்கள் அதற்கு இணங்கின. செய்தியாளர்கள் அயல் கோத்திரங்களுக்குச் சென்று இராணுவத்தில் ஆட்களை இணைத்துக் கொண்டனர்.(6:33-35).

**6:36-40 அடையாளம் கேட்டுக் கொள்ளல் ;-** முதல்நாள் காலை ஈரமாகவும் அடுத்த நாளில் வறண்டதாகவும் இருக்க வேண்டும். மயிருள்ள ஒருதோலில் இரண்டுவிதமான அடையாளங்களைத் தேடினார், அதன்மூலம் கர்த்தர் கிதியோன் மூலமாக இஸ்ரவேலர்களை இரட்சிப்பார் என்பதை உறுதிப்படு த்தினார்.

**7:1-8 படையினரை குறைக்கும்படி கர்த்தர் ஆணையிட்டார்.** தொடர்ந்து பல சோதனைகள் மூலம், கர்த்தர் கிதியோனின் இராணுவத்தை 32,000 இலிருந்து 300 ஆகக் குறைத்தார். 135,000 மீதியானியரை எதிர்த்து 300 இராணுவம் போரிட்டு வெற்றி கொண்டது, அங்கு கர்த்தரின் கரம் அவர்களோடு இருந்தது.

**7:9-15 ஒரு அப்பத்தின் மூலமாக கர்த்தர் இந்த அற்புதத்தைச் செய்தார்.** சுட்டிருந்த ஒரு வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளயத்திற்கு உருண்டு வந்தது, அது கூடாரமட்டும் வந்தபோது, அதை விழத் தள்ளிக் கவிழ்த்துப் போட்டது, கூடாரம் விழுந்து கிடந்தது என்றான். இந்த கனவின் மூலம் மீதியானியர் மிகவும் பயந்தவர்களாய் கிதியோன் தங்களை அழித்துப் போடுவார் என்று கலங்கினார்கள்.

**7:16-25 தீவெட்டிகளும், எக்காளங்களும்;-** கிதியோன் தன்னுடைய படைகளை பானைக்குள் அடங்கிய தீவெட்டிகளையும் எக்காளங்களையும் கையில் எடுக்கும்படி கட்டளையிட்டான். அவ்வாறே அவர்கள் யாவரும் செய்தார்கள். நடு இராத்திரியில் ஒரேநேரத்தில் அவர்கள் தங்கள் பானைகளை உடைத்தார்கள், அதேநேரம் எரிகிற தீவெட்டிகள் வெளிச்சத்தைக்கக்கின, அவர்கள் இட்ட பெரும் சத்தம் மீதியானியர்களைப் பெரும் குழப்பத்திற்குள்ளாக்கியது. ஒருசிலர் ஓடினார்கள், இன்னும் சிலர் தங்களுக்குள்ளேயே வாழினால் வெட்டி தங்களையே கொலைசெய்தார்கள்.

**8:1-3 கிதியோனின் சாமர்த்தியம்.** கிதியோனின் ஆரம்ப வெற்றியிலே எப்பிரகாமியர்கள் எரிச்சலடைந்தார்கள், அவர்கள் கோபத்துடன் கிதியோ னுடையவர்களை வசைகூறத் தொடங்கினார்கள், தங்களையும் உதவிக்கு அழைக்கவில்லை என்பதனால்.கிதியோனின் சாமர்த்தியம் அவர்களைச் சாந்தப்படுத்தியது.( 12:1-7).

**8:4-9 நான் மீண்டும் வருவேன்**, என்று கிதியோன் மீதியானியரைத் தொடரும்போது கூறினார். இரண்டு நகரங்களில் தன்னுடைய வீரர்களுக்கு உணவு கொடுக்கும்படி வேண்டிக் கொன்டான். இந்த நகரங்கள் கிதியோனுக்கு உதவி செய்ய மறுத்துவிட்டன. கிதியோன் தன்னுடைய வேலைமுடிந்து திரும்பிவரும்போது அந்த நகரங்களை தண்டித்தான்.

**8:10-21 வெற்றியும் பழிவாங்குதலும் ;-** அனேகமான மீதியானவர்கள் கொல்ல ப்பட்டு விட்டார்கள். கிழக்கு வனாந்தரத்தில் 15,000 மீதியானியர்கள் மிகுதியாக இருந்தார்கள். அவர்களை வெற்றி கொண்டபின்பு, தனக்கு உதவி செய்ய மறுத்த நகரங்களை பழிவாங்குவதற்கு திரும்பிவந்தான்.

**8:22-35 கிதியோன் முடியை வெறுத்தான், ஆனால் பொன்னை வெறுக்க முடியவில்லை;-** இஸ்ரவேலர்கள் கிதியோனைத் தங்கள் ராஜாவாக்க விரும்பினார்கள். அவன் ஞானமாக அதை வெறுத்தான். கர்த்தரே இஸ்ரவேலர்களை ஆளுவார் என்று கூறினான். வெற்றியிலே பெற்றுக் கொண்ட பொன் காது தோடுகளை தன்னிடத்தில் தரும்படி வேண்டிக்கொண்டான். அந்தப் பொன்னினால் அவன் ஒருவிதமான சுருபத்தை உண்டாக்கினான், அதனை ஜனங்கள் ஆராதனை செய்தார்கள். இந்த விக்கிரகத்துடனும், இஸ்ரவேலர்கள் 40 வருடங்கள் சமாதானமாக இருந்தார்கள். கிதியோனுக்கு பல மனைவிகளும் 70 பிள்ளைகளும் இருந்தார்கள். கிதியோன் மரித்தபின்பு, இஸ்ரவேலர்கள் கர்த்தரை மறந்து பாகால் தெய்வங்களை ஆராதித்தார்கள். (8:32-35)

**9:1-57 கிதியோனின் பிள்ளைகளின் கொலைகார ஆளுகை;-** அபிமலேக், கியோனின் மறுமனையாட்டியின் மகன் ராஜாவாக அறிவிக்கப்பட்டான். அவனுடைய தாயாரின் உறவினர்கள் அவனுக்கு உதவி செய்தார்கள். தன்னுடைய 70 ஒன்றுவிட்ட சகோதரர்களை கொலைசெய்வதற்கு கூலி யாட்களை அமர்த்தினான். கொலைகாரரின் திட்டம் வெற்றியளித்தன. 70 இல் ஒருவர் மாத்திரம் உயிர் தப்பினார். சீகேம் ஜனங்கள் அபிமலேக்கை ராஜாவாக அறிவித்தார்கள். யோதாம், உயிரதப்பிய ஒன்றுவிட்ட சகோதரன், ஒரு விடுகதையைக் கூறி அபிமலேக்கு பொருத்தமற்றவன் என்று கூறினான். (9:7-15),அத்துடன் சீகேம்மீது சாபத்தையும் கூறினான், சீகேமியரும், அபிமலேக்குவும் ஒருவரை ஒருவர் கொல்லுவார்கள் என்றும் கூறினான். அபிமெலேக்கு இஸ்ரவேலை மூன்றுவருஷம் அரசாண்ட பின்பு, அபிமெலேக்குக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியைத் தேவன் வரப்பண்ணினார்.
யுத்தத்தில் வெற்றியை குடுத்து இறுதியில் ஒரு பெண் ஏந்திர கல்லுத்துண்டை அபிமெலோக்கு தலை மீது போட்டு மண்டையை உடைத்தாள். ஒரு பெண்ணால் தான் மரிக்ககூடாது தன்னை கொல்லும்படி தனது சேவகனிடம் கேட்டுக்கொண்டான்.
**10:1-5 8வது நியாயதிபதி தோலா, 9 ம் நியாயதிபதி யாவீர்**;- 23 வருடங்களாக இசக்கார் கோத்திரத்து தோலா என்பவர், இஸ்ரவேலை நியாயம் விசாரித்தார். அவனுக்குப்பின்பு, கீலேயாத்தியனான யாவீர் எழும்பி, இஸ்ரவேலை இருபத்திரண்டு வருஷம் நியாயம் விசாரித்தான்.

10:6-9 **அவர்கள் ஒருபோதும் கற்றுக் கொள்ளவில்லையா?** பாவம் துன்பத்தைக் கொண்டுவரும். அவர்களுடைய எல்லாத் துன்பங்களுக்குப் பதிலாக, இஸ்ரவேலர்கள் அந்நிய தெய்யவங்களை அதிகமதிகமாக சேவித்தார்கள். கர்த்தர் அவர்களை இருவழிகளில் வேதனைகளைக் கொடுத்தார், ஒன்று பெலிஸ்தியர்கள் மேற்குப்பக்கத்திலும், அடுத்ததாக, கிழக்குப்பக்கத்திலிருந்து அம்மோனியர்களும் உபத்திரபவத்தைக் கொடுத்தார்கள்.

10:10-18 “நீங்கள் உங்களுக்காகத் தெரிந்துகொண்டவர்கள் உங்களை இரட்சிக்கட்டும் என்றார்” இஸ்ரவேலர்கள், முதன் முதலாக நியாயாதிபதிகள் காலத்தில், தாங்கள் பாவம் செய்தோம் என்பதை ஒத்துக் கொண்டார்கள். ஆனால் கர்தருக்கு அவர்கள் உண்மையாக மனம் திரும்பவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது, அதனால் அவர், அவர்களை இரட்சிக்கமாட்டேன் என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டார். (10:13) அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார். 10:16) இந்தவேளை இஸ்ரவேலர்கள் தங்கள் இரட்சகரைத் தாங்களே தேடிக் கொள்ளட்டும்.

11:1-11. **ஜெப்தாவிற்கான சோதனைகள்;-** கீலேயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் பரஸ்திரீயின் குமாரன்; இதனால் அவனுடைய ஒன்றுவிட்ட சகோதரர்கள் அவனை வெறுத்தார்கள். சமூகத்தாலும், சகோதரராலும் துரத்தி விடப்பட்ட பின்பு, ஜெப்தா தான் ஒரு தகுதியான தலைவன் என்பதை நிரூபித்தான். அம்மோனியர்கள் அவர்களைத் தாக்குவோம், என்று கூறியபோது, ஜெப்தாவைத் தலைமை தாங்கி வழி நடத்தும் படி ஜனங்கள் வேண்டிக் கொண்டார்கள்.

11:12-33 **ஜெப்தாவின் வெற்றிகள்.** அம்மோனியர்களுடன் போச்சுவார்த்தை செய்ய முயற்சித்த பின்பு, ஜெப்தா யுத்ததிற்கு ஆயத்தமானான். அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி: தேவரீர் அம்மோன் புத்திரரை என்கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால், நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பிவரும்போது, என் வீட்டுவாசற்படியிலிருந்து எனக்கு எதிர் கொண்டுவருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான். (11:30-31).

**11:34-40 .ஜெப்தாவின் துக்கம்:-** ஜெப்தாவின் பயங்கரம், ஜெப்தா யுத்தம் முடிந்து திரும்பி வருகிறபோது, அவளுடைய ஒரே மகள் அவனை முதன் முதலில் வந்து வாழ்த்தினாள். அவனும், அவனது மகளும் பொருத்தனை செலுத்த வேண்டும் என்பதில் ஒருமனப்பட்டார்கள். இரண்டு மாதங்கள் தங்கள் சினேகிதர்களுடன் அவள் கழித்த பின்பு, அவள் தன் தகப்பனிடத்திற்குத் திரும்பி வந்தாள், அவன் தன்னுடைய பொருத்தனையை அவளைக் கொல்வதன் மூலம் நிறைவேற்றினான். ஜெப்தாவின் செயற்பாடு பாகால் வழக்கங்களுக்கு ஒத்துபோனதேயல்லாமல், கர்த்தருடைய அனுமதியைப் பெற்றுக் கொள்ளவில்லை.

12:1-7 **ஷிபோலேத்.** இந்த வார்த்யையைத் தவறுதலாக உச்சரித்தால் சாவீர்கள். அவர்கள் மனாசேயியனாகிய கிதியோனிடம் இருந்தபோல, எப்பிராமியர் ஜெப்தாவின் வெற்றியில் பொறாமை கொண்டார்கள். அவர்கள் அம்மோனியர் களுடன் போர் நடக்கும் போது தங்களையும் உதவிக்கு அழைக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். (12:1) ஜெப்தா, கிதியோனைப் போல சாமர்த்தியமானவர் அல்ல, அதனால் அழைத்தபோது உதவிக்குவராத எப்பிரகாமியரை கடிந்துபேசிவிட்டார். (12:2-3).யோர்தானைக் கடந்து தப்பிப் போக முற்பட்ட எப்பிரகாமியருக்கு எதிராக ஜெப்தாவின் ஆட்கள் எதிராகச் செயற்பட்டார்கள். ஆற்றைக் கடக்க முற்பட்டவர்களை ஜெப்தாவின் மனிதர்கள் பிடித்து **ஷிபோலேத்** என்ற வார்த்தையை உச்சரிக்கும்படி வற்புறுத்தி னார்கள்.தவறுதலாக உச்சரித்தவர்களை கொலை செய்தார்கள் . **ஷிபோலேத்** என்ற சொல் ஒரு சோதனைச் சொல்லாக மாறியது
**12:8-15 இப்சான்,ஏலோன்,அப்தோன்.-** இப்சான், ஒரு பெத்தலகேமியன் 30 மகன்களும், 30 மகள்மாரையும் கொண்டவன். இஸ்ரவேலை 7 வருடங்கள் நியாயம் விசாரித்தான். ஏலொன், செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்தவர் இஸ்ரவேலரை 10 வருடங்கள் நியாயம் விசாரித்தார். அப்போது, இவர் எப்பிரகாமியக் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இஸ்ரவேலர்களை எட்டு வருடங்கள் நியாயம் விசாரித்தார். அவருக்கும் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். 40 ஆணும், 30 பெண் பிள்ளைகளையும் கொண்டவராவார்.

**13:1-25 சிம்சோனின் பிறப்பு;-** மனோவாவின் மனைவியை கர்த்தருடைய தூதன் சந்தித்தார், அவருக்கு ஒரு ஆண்மகன் பிறப்பார் என்பதைக்கூறினார். அவளுடைய மகன் பிறப்பிலேயே நசரேயனாக இருப்பதால், அவள் மதுபான குடிவகை எதனையும் குடிக்ககூடாது என்றும் கூறினார்.(எண்ண. 6:1-21), இஸ்ர வேலர்களைப் பெலிஸ்தரின் கையிலிருந்து மீட்கத் தொடங்குவார்.

(13:5) இஸ்ரவேலர்கள், பெலிஸ்தர்களை முற்றும்முழவதாக தாவீதின் காலம் வரை தோற்கடிக்கவில்லை. திரும்பவுமாக கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை கர்த்தருடைய விஷேசித்த வல்லமை சம்பந்தமாக உரையாடினார். பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். (13:24-25).

**14:1-4 அவனுடைய பாகால் மனைவி கர்த்தருடைய திட்டத்தில் ஒரு பகுதியாகும்.** சிம்சோன் பெலிஸ்திய பெண்ணைக்கண்டு அவளையே திருமணம் செய்வேன் என்று கூறினான். அவனுடைய பெற்றோர், ஏன் இவன் இஸ்ரவேல் பெண்ணைத் திருமணம் முடிக்க கூடாது என்று கலங்கினார்கள். சிம்சோனனுடைய பதில் அந்த நாட்களுக்குரிய ஆவிக்குரிய பிரகாரமாக இருந்தது. அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ள வேண்டும் என்றான். (14:3). பெலிஸ்தியருடன் சிம்சோன் யுத்தம் செய்ய வேண்டியது கர்த்தருடைய திட்டத்தில் ஒன்று என்று ஒருவருக்கும் தெரியாது.(14:4;13:5).

**14:5-18 தேன், விடுகதை, காட்டிக் கொடுத்தல்.** திருமண சம்பந்தமான ஒழுங்கு களைக் கவனிப்பதற்காக பெலிஸ்திய பெண்ணின் வீட்டிற்குப் போகும் போது, சின்சோன் ஒருசிங்கத்தைச் சந்தித்தான். கர்த்தருடைய ஆவியானவர், அவனுக்கு சிங்கத்தைக் கொல்வதற்குரிய வல்லமையைக் கொடுத்தார். அவன் தன்திரும ணத்திற்காக அவ்வழியால் திரும்ப வரும்போது, மரிதுப்போன சிங்கத்தின் உடலில், தேன்கூட்டை சிம்சோன் அவதானித்தான்.அவன் தன்னுடைய திருமண வீட்டுக் கொண்டாட்டத்தில் தேன்கூடு சம்பந்தமான விடுகதையைக் கூறினான். ஆனால் அங்கு வந்த ஒருவராலும் அந்த விடுகதையை விடுவிக்க முடியவில்லை. அங்கு வந்தவர்கள் பெண்ணின் தந்தையின் வீட்டைக் கொழுத்தி எரிக்கப் போவதாக அங்கு வந்தவர்கள் பெண்ணை எச்சரித்தனர். பல நாட்கள் கெஞ்சிய பிற்பாடு தன்னுடைய மனைவிக்கு சிம்சோன் அந்த விடையை கூறினான், அதனை தன்னுடைய விருந்தாளிகளுக்கு இரகசியமாக அவள் கூறிவிட்டாள். இதன்பின் அவர்கள் சிம்சோனுக்கு விடையைக் கூறினார்கள்.

**14:19-20 அவனது கடனுக்காக 30பேர் மரித்தார்கள்.** காட்டிக் கொடுக்கப்பட்டதால் கோபமடைந்த சிம்சோன், பெலிஸ்தியரின் வேறு நகரத்திற்குச் சென்று, 30 பேரைக் கொலைசெய்து, பிரேதங்களின் உடுப்பைக்

களைந்து கொண்டுவந்து விடுகதையை விடுவித்ததற்கான கூலியைக் கொடுத்தான். சிம்சோனுடைய செயற்பாடுகள் ஒன்றும் இல்லைபோல் தோன்றினாலும், அதில் கர்த்தருடைய செயற்பாடுகள் அடங்கியிருந்தன.(14:19 ) பெலிஸ்தியரைக் குழப்பம் அடையவைப்பதற்கான செயற்பாடுகள் அங்கு உருவாக்கப்பட்டன.(14:4).

15:1-8 .**அவனுடைய மனைவியோ வேறொருவனுக்கு மனைவியாக்கப்பட்டாள்.** சிம்சோன் தன்னுடைய மனைவியிடத்திற்கு வந்தபோது, அவளைப்பார்கவிடாமல் அவன் தடுக்கப்பட்டான். சிம்சோன் அவளை மறந்துவிட்டான் என எண்ணி, அவனுடைய நண்பனுக்கு அவளை, தகப்பன் திருமணம் செய்து கொடுத்து விட்டான். (14:20; 15:2) கோபமடைந்த சிம்சோன், புதிய ஒரு வழியை உபயோகித்து அறுவடைக்குத் தயாராகவிருந்த வயல்களையும், திராட்சைத் தோட்டங்களையும் 300 நரிகளை பிடித்து அதன் வால்களில் பந்தத்தை கொழுத்தி அழித்துவிட்டான். இப்படிச் செய்தவன் யார் என்று பெலிஸ்தர் கேட்கிறபோது, திம்னாத்தானுடைய மருமகனாகிய சிம்சோன்தான்; அவனுடைய பெண்சாதியை அவனுடைய சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டபடியால் அப்படிச் செய்தான் என்றார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் போய், அவளையும் அவள் தகப்பனையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள். இதனால் கோபமடைந்த சிம்சோன் மேலும் அதிக பெலிஸ்தியரைக் கொலை செய்தான்.

15:9-20 **3000பேரால் கட்டப்பட்டான் 1000பேரைக் கொலைசெய்தான்.** யூதாமனுஷர் மிகவும் பயந்ததினால், அவனைக் கட்டி பெலிஸ்தரிடம் ஒப்படைக்க வந்தார்கள். அவன் கட்டப்பட்டு கையளிக்கப்பட்ட போது கர்த்தருடைய ஆவி அவன் மேல் வந்தபடியால்,அவன் கழுதை தாடையெழும்பினால் ஆயிரம் பெலிஸ்தரைக் கொலை செய்தான். 15:18. தாகமடைந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டான் தாண்ணீர்குடுத்தார் கர்த்தர். 15:20 இஸ்ரவேலை 20 வருடம் நியாயம் விசாரித்தான் சிம்சோன்.

16:1-3 **அவனுக்கு எதிராக வைக்கப்பட்ட காசாவின் கதவுகளால் ஒரு பிரயோசனமும் இருக்கவில்லை.** காசாவிலுள்ள ஒரு வேசியினடத்தில் சிம்சோன் பிரவேசித்தான். காசாவின் ஊர் மக்கள் அந்த நகரத்தின் கதவை மூடிவைத்தார்கள், ஆனால் சிம்சோன் முழுக்கதவையும் துக்கிக் கொண்டு 38

மைல் தூரம் கொண்டு சென்றான்.

16:4-22 **தெலிலாளின் தீர்மானம் அவனை உள்பிரவேசிக்கப்பண்ணியது.** அவளிடத்திற்குப் பெலிஸ்தரின் அதிபதிகள் போய்: நீ அவனை நயம் பண்ணி, அவனுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்றும், நாங்கள் அவனைக் கட்டிச் சிறுமைப்படுத்துகிறதற்கு எதினாலே அவனை மேற் கொள்ளலாம் என்றும் அறிந்து கொள்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொரு வரும் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு உனக்குக் கொடுப்போம் என்றார்கள். இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு, (16:16),தன் இருதயத்தை யெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின் மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல் தேவனுக் கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என்பலம் என்னைவிட்டுப்போம்; அதினாலே நான்பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப் போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான். சிம்சோனின் பலத்தின் இரகசியத்தை அறிய முயற்சித்த போது மூன்று முறை ஏமாற்றினான் சிம்சோன், நாங்காவது முறை சொன்னான். முதல் முறையே அவளை விட்டு விலகி இருந்தால் நலமாயிருந்திருக்கும். இதனால் இரகசியத்தை அறிந்த தெலிலாள் அவன் தலையைச் சிரைத்து ,பெலஹீனமான சிம்சோனை பெலிஸ்தர்களிடம் கொடுத்தாள். அவர்கள் அவன் கண்களைப் பிடுங்கி, அவனைச் சிறையில் அடைத்து, அதிக சிரமமான வேலைகளைச் செய்யும்படி பணித்தனர். அவன் சிறையில் இருக்கும் போது அவன் மயிர் திரும்பவும் வளர்ந்தது அதனோடு சேர்ந்து அவனது நம்பிக்கையும் வளர்ந்தது.

16:23-31 **சிம்சோன் ஜெபித்தான், வீட்டை இழுத்து விழுத்தினான்.** பெலிஸ்தரின் பிரபுக்கள்: நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனாகிய **தாகோனுக்கு** ஒருபெரிய பலி செலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் கூடிவந்தார்கள். அவர்களை மகிழ்விக்கும்படி கண்தெரியாத சிம்சோனையும் அங்கு கொண்டுவந்தார்கள். அவனை இரண்டு தூண்களுக்கு அருகில் நிற்பாட்டினார்கள், அவன் ஜெபம்பண்ணி, அந்த தூண்களை இழுத்து தனக்கு மேலும் அங்கு கூடியிருந்தவர்கள் மேலும் விழும்படி செய்து மரித்தான். அனேக பெலிஸ்தர்கள் அந்த இடத்தில் மரித்தார்கள். மனம்

திரும்பியதால் கர்த்தர் உதவினார். சிம்சோன் தொடர்ந்து பாவ வாழ்கை வாழ்ந்ததால் பரிதாபமாக இறந்தான்.

**இஸ்ரவேல்களின்வெட்கம்.(17-21)**

**17:1-13 வெள்ளியினாலான விக்கிரகம், ஒரு ஆசாரியன்.;-**

மீகா என்ற பெயருள்ள மனுஷன் தன்தாயிடமிருந்து சில வெள்ளிக் காசுகளை களவாடினான். அந்த வெள்ளிக்காசுகளைத் திரும்பக் கொடுத்த போது, அவள் அது கடவுளுக்கென்று பொருத்தனை செய்யப்பட்டது, அதிலிருந்து ஒரு விக்கிரகம் செய்யவேண்டும் என்று கூறினாள். அவன் விக்கிரகத்தைச் செய்து தன்னுடைய பிரத்தியேக பூசை அறையில் வைத்திருந்தான். அங்கே அவனுடைய ஒரே மகன் ஆசாரியனாக இருந்தான். அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தானர். (17:6). யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானும் லேவியனுமான ஒரு வாலிபன் அங்கே தங்கியிருந்தான். அந்த மனுஷன் எங்கேயாகிலும் பரதேசியாய்ப் போய்த்தங்கும்படிக்கு, யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரை விட்டு ப்புறப்பட்டுப் பிரயாணம் போகையில், எப்பிராயீம் மலைத் தேசத்தில் இருக்கிற மீகாவின் வீட்டில் வந்துசேர்ந்தான். எங்கே இருந்து வந்தாய் என்று மீகா அவனைக் கேட்டதற்கு, அவன்: நான் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய லேவியன், எங்கேயாகிலும் போய்த் தங்கப்போகிறேன் என்றான். அப்பொழுது மீகா: நீ என்னிடத்தில் இரு, நீ எனக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிருப்பாய்; நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக்காசையும், மாற்று வஸ்திரத்தையும், உனக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன் என்று அவனிடத்தில் சொன்னான்; அப்படியே லேவியன் உள்ளே போனான். அந்த லேவியன் அந்த மனிதனிடத்தில் இருக்கச் சம்மதித்தான்; அந்த வாலிபன் அவனுக்கு அவன் குமாரரில் ஒருவனைப் போல் இருந்தான். மீகா அந்த லேவியனைப் பிரதிஷ்டை பண்ணினான்; அந்த வாலிபன் அவனுக்கு ஆசாரியனாகி, மீகாவின் வீட்டில் இருந்தான். அப்பொழுது மீகா: எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மை செய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றான். (17;8-13). ஒழுங்கான வேத வாசிப்பீன்மையால், மோசேயின் கட்டளைகளை சரியாக அறியவில்லை. சிலை வழிபாடுசெய்யக்கூடாது என்பதும். ஆசாரிப்பு கூடாரத்தில் ஆசாரியன் தான் ஆசாரிய ஊழியம் கடைப்பிடிக்கவேண்டும் என்பதை அறியாதிருந்தான்.

**18:1-31 இந்த இடத்தில் வேலைசெய்கிற உன்னைப்போல் நல்ல ஆசாரியன் யார்?** அந்த நாட்களில், தாண் கோத்திரத்தார் தங்களுடைய நிலத்தைச் சுதந்தரிக்க முடியாமல் இருந்தார்கள் அதனால் வேறு இடத்தில் குடியமர ஆலோசித்தார்கள். அவர்கள் புதிய இடத்தைத் தேடிக் கொண்டிருக்கும் போது மீகாவையும், அவரது, புதிய ஆசாரியனையும் சந்திக்க நேர்ந்தது. தாண் கோத் திரத்தார், இஸ்ரவேலின் மேற்குக்கரைக்கு குடியேற முற்பட்டபோது, அவர்கள் மீகாவினுடைய ஆசாரியனையும் தங்களுடன் வரும்படி அழைத்தார்கள். (18:7-26).
தாண் புத்திரர் தேவன் விரும்பும்படி ஆராதித்திருக்கலாம் மூடநம்பிக்கையுடன் செயற்படாமல் தங்கள் மாம்ச சிந்தையில் செயல்பட்டு பல தவறுகளை இழைத்தனர். தாண் கோத்திரத்தார், அமைதியான நகரமாகிய லாயீஸ் நகரத்தை கைப்பற்றினார்கள். அதற்கு தங்கள் முற்பிதாக்களின் பெயரை இட்டார்கள். நகரமானது, விக்கிரக ஆராதனை நிறைந்ததாக இருந்தபடியால் சிறப்படையாமல் இருந்தது.(18:27,30-31).

**19:1-30 பென்ஜமீனியர்களின் அட்டூழியம்;-" எகிப்தைப் போல கடுங் குற்றச் செயல்கள்".** ஒரு லேவியன் தன் மறுமனையாட்டியுடன் பிரயாணம் பண்ணி னான், அவன் கிபியா என்ற பென்ஜமினியர்களின் தேசத்தில் இராத் தங்கி னார்கள். லேவி உடல் உறவுவைக்க முற்பட்டபோது, அவனுடைய மறு மனையாட்டியை அவர்களுக்கு ஒப்புக் கொடுத்தான். இரவு முழுவதும் அவளை பாலியல் துஸ்பியோகம் செய்தார்கள், விடியற்காலையில் அவள் அந்த வீட்டின் வாசற்படியில் மரித்தவளாய் கிடந்தாள். இந்த அநியாயச் செயலை இஸ்ரவேலர்கள் அறியும்படிக்கு, அந்த லேவியன் அவளது மரித்த உடலை 12 துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் அனுப்பி வைத்தார்கள். அப்பொழுது அதைக் கண்டவர்களெல்லாரும், இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டநாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் இதைப் போலொத்தகாரியம் செய்யப்படவும் இல்லை, காணப்படவும் இல்லை; இந்தக் காரியத்தை யோசித்து ஆலோசனைபண்ணிச் செய்யவேண்டியது இன்ன தென்று சொல்லுங்கள் என்றார்கள்(19:30).

**20:1-48 பென்ஜமினியர்களுக்கு எதிரான குடியியல் யுத்தம்;-** அந்த பெண்ணுக்கு என்ன செய்தார்கள் என்பதை அறிவதற்காக எல்லாக் கோத்திரத்தாரும் ஒன்று சேர்ந்து 400,000 மனிதர்கள் பென்யமினியர்களிடத்திற்கு வந்தார்கள். லேலிய ருக்கு என்ன நடந்தது என்று அறிய அவர்கள் எல்லாரும் ஒன்று கூடி குற்ற வாளியைத் தண்டிக்கும் செயற்பாட்டில் இறங்கினார்கள்.அவர்கள் கிபியாவிலே குற்றம் செய்தவரை தரும்படி ஒன்று கூடினார்கள்.(20:8-13). ஆனால் பென்ய மினியர்கள் அப்படிச் செய்ய மறுத்தார்கள்., அதனால் 11 கோத்திரத்தாரும் அவர்களுக்கு எதிரான யுத்தத்தை அறிவித்தார்கள். பென்ஜமினியர்கள் முதலா வது யுத்தத்தில் வெற்றி பெற்றார்கள். 20:19-25). 11 கோத்திரத்தாரும் பெத்தேலில் உடன்படிக்கைப் பெட்டிக்கு முன் ஒன்று கூடினார்கள். பிரதான ஆசாரியரான பினேகாஸ் அவர்களை வழிநடத்தினார், அவர்கள் அழுதார்கள், உபவா சித்தார்கள், பலிகளைச் செலுத்தினார்கள், கர்த்தர் வெற்றி தருவேன் என்று வாக்களித்தார். மூன்றாம் நாள் யுத்தத்தில் பென்ஜமினியர்கள் தோற்கடிக்கப் பட்டார்கள். அவர்களில் 25,000 பேர் கொலை செய்யப்பட்டார்கள். பென்ஜமீன் போர் வீரர்களில் ஓடித்தப்பிய 600 பேரைத்தவிர மற்ற யாவரும் கொலை செய்யப்பட்டார்கள்.

**21:1-24 இணக்கம் செய்தல், பென்ஜமினியர்களுக்கான மனைவிகளைத் தேடுதல்;- 11** கோத்திரங்களும் மிகபெரிய பிரச்சனையில உள்ளது. தங்கள் சக கோத்திரத்தை ஏறக்குறைய முற்றும் அழித்துவிட்டார்கள். அத்துடன் தங்கள் பெண்பிள்ளைகளை அவர்களுக்கு மனைவியாகக் கொடுப்பதில்லை என்றும் பொருத்தனை செய்து கொண்டார்கள். அந்தக் கோத்திரம் அழிந்து போகத படிக்கு எப்படிக் காத்துக் கொள்வது என்று அறியாதிருந்தார்கள். பென்ஜமினியர்களுக்கு எதிரான யுத்தத்தில் கீலேயாத்திலுள்ள யாபேஸ் குடும்பம் பங்குபற்றவில்லை என்பதை அறிந்து கொண்டார்கள், 11 கோத்தி ரத்தாரும் அங்கு சென்று 400 கன்னிப் பெண்களைத் தவிர மற்ற யாவரையும் கொலை செய்துவிட்டார்கள். 600 உயிர்தப்பிய பென்ஜமினிய யுத்த வீரர்க ளுக்கா இந்த 400 கன்னிகைகளையும் மனைவியாகக் கொடுத்தார்கள். இன்னும் 200 பேர்களுக்கான மனைவிமாரைக் கண்டுபிடித்தேயாகவேண்டிய நிலையில் இருந்தார்கள். ஆனால் மற்ற கோத்திரத்தார் நேரடியாக அவர்களுக்குத் தங்கள் பிள்ளைகளை மனைவியாகக் கொடுக்க

விரும்பவில்லை, ஆனால் சீலோவிலே நடந்த குறித்த கொண்டாத்தில் பங்குபற்றுபவர்களை தங்கள் மனைவிகளாகக் கடத்திக் கொண்டுபோகும்படி அனுமதி கொடுத்தார்கள். (21:16-24)

**21:25 ஒரு துக்கமான துக்கம்.** நியாயாதிபதிகளின் துய்மையற்ற கதைகள், புத்தகத்தில் மோசமான நிலைக்கு வருவதை தங்கள் பிதாக்களைப் பார்க் கிலும் கேடாய் நடந்து, தங்கள் முரட்டாட்டமான வழியை விடாதிருப்பா ர்கள். (2:19) இந்தப்புத்தகத்தின் கடைசிவசனம், அந்நாட்களிலே இஸ்ரவே லில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்.

- தெபோராள்;- நியாயாதிபதியாக இருந்தாள், கானானியரைத் தோற்கடிப்பதற்கு பாராக்கிற்கு உதவினாள். (4-5)
- **கணவன்.;-** லபிதோத் (4:4) நியாயாதிபதிகள் புத்தகத்தில் ஞாபகத்தில் வைத்திருக்க கூடிய மனிதர்கள் சிலர்.
- **தொழில்;-** தீர்க்கதரிசினி, நியாயாதிபதி(4:4)

**தெபோராவின் ஆவிக்குரிய குணங்கள்.**

• உன்னுடைய தொழிலையோ அல்லது உன்னுடைய நிலையையோ நீ குறைத்து மதிப்பிட வேண்டாம். கர்த்தர் இஸ்ரவேலில் மனைவியாக இருந்ததும், அம்மாவாகவும் இருந்த ஒருவரை தீர்க்கதரிசியாக கடமையாற்ற அழைத்தார், அதுமட்டுமல்லாமல் ஒரு படையை யுத்தத்தை வழிநடத்தவும் அழைத்தார். (4:4-15).

• தெபோராள் சரியாக பாராக்கிற்கு உதவிசெய்த போதிலும், நாங்கள் கர்த்தரின் சித்தத்தைச் செய்வதற்கு இன்னுமொருவரின் உதவியை நாட வேண்டியதில்லை. பாராக்கின் அரைகுறையான கீழப்படிதல் அரைகுறையான கீழ்ப்படிதலையே தந்தது. (4:4-9).

**முக்கிய வசனங்கள்;-** லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள். அவள் எப்பிரா யீம்மலைத் தேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபோராளின் பேரச்சமரத்தின் கீழேகுடியிருந்தாள்; அங்கே இஸ்ரவேல்

புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணைக்குப்போவார்கள். அவள் நப்தலி யிலுள்ள கேதேசிலிருக்கிற அபினோகாமின் குமாரன் பாராக்கை வரவழை த்து: நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும் கட்டளையி ட்டார். (4:4-6).

நன்றி கர்த்தாவே

திராணி.

உசாத்துணை நூல்கள்.

**WILLMINGTON'S**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

WILLMINGTON'S BIBLE HANDBOOK *by* Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois

Thomas Nelson Publishers. (1996). *Nelson's complete book of Bible maps & charts : Old and New Testaments.* "Completely revised and updated comfort print edition"; Includes indexes. (Rev. and updated ed.). Nashville, Tenn.: Thomas Nelson.